செ.வெ. எண்: 558 நாள்: 15.9.2011

**திருத்தப்பட்டது**

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தமிழக காவல்துறை அதிகாரிகளுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க ஆணையிட்டுள்ளார்

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழ் நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படைப் பிரிவு மற்றும் காவல்துறை விரல்ரேகைப் பிரிவுகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்களின் சிறந்த சேவையைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வழங்கப் பட்டு வருகின்றன.

அவ்வாறே, இந்த ஆண்டும் அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் 15ம் நாள் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முதல் காவலர் நிலை வரையில் 100 காவல்துறை அலுவலர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையில் துணை இயக்குநர் முதல் தீயணைப்பு வீரர் நிலை வரையில் 10 அலுவலர்களுக்கும், சிறைத்துறையில் உதவி சிறை அலுவலர் முதல் முதல்நிலை சிறைக் காவலர் வரையில் 10 அலுவலர்களுக்கும், ஊர்க்காவல் படையில் கோட்டத் தளபதி முதல் பிரிவு தலைவர் நிலை வரையில் 5 பேர்களுக்கும் மற்றும் காவல்துறை விரல்ரேகைப் பிரிவில் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கும் மற்றும் ஒரு துணை காவல் கண்காணிப்பாளருக்கும் ஆக மொத்தம் 127 பேருக்குப் பணியில் காட்டிய மிகச்சிறந்த கடமைப் பற்றுறுதியைப் பாராட்டும் முகத்தான் ‘‘மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள்’’ வழங்கிட முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின்படி, பதக்கங்கள் பெறுகின்ற அலுவலர்களுக்குப் பதக்க விதிப்படி, பணிநிலையின் அடிப்படையில் ஒட்டு மொத்த (lump sum) மானியத் தொகை அளிக்கப்படும். மேற்கண்ட மானியத் தொகையை இந்த ஆண்டு முதல் இரட்டிப்பாக்கி வழங்கிட மாண்மிகு தமிழக முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இது தவிர, தீயணைப்புத்துறையில் 16 அதிகாரிகளுக்கும் மற்றும் காவல்துறையில் ஒரு உதவி ஆய்வாளருக்கு அவரது வீர மரணத்திற்கு பின்னும், அவர்கள் ஆற்றியுள்ள வீர தீரச் செயல்களைப் பாராட்டி இந்த ஆண்டிற்கான தமிழக முதலமைச்சரின் வீர தீர செயல்களுக்கான பதக்கங்கள் வழங்கிடவும், மேற்படி பதக்கம் பெறுபவர்களுக்கு பதக்க விதிப்படி, மாதந்தோறும் வழங்கப்படவேண்டிய பதக்கப்படி வழங்கிடவும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

2011க்கான தமிழக முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள், அறிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு, பின்னர் நடைபெறவுள்ள பதக்கங்கள் வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதக்கங்களை வழங்கிப் பாராட்டுவார்கள்.

**வெளியீடு: –**

**ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**